# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 157 — 1975 මාර්තු 27 වැනි බ්‍රහස්පතින්දා — 1975.03.27

157 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு மாச்சு மாதம் 27 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (III)—வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்தலைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம். | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் .. .. | 53 | அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள் .. .. | — |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு .. ... | — | வடிவமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | 55 |
| ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | 54 | பலவிதமானவை .. .. .. | — |


*கவனிக்க.—தேசிய விலைகள் ஆணைக்குழு சட்டமூலம் 1975 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம் கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1/ என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அலுவலகத்திற்குச் சொந்தமான பதிவேடுகளைப் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக, அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 9 மணிதொடக்கம் மாலை 3 மணி வரையும் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 2 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப் படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.

### " அ " அல்லது " ஆ " பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் " அ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் " ஆ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் " ஆ " என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

---

*வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்*

*அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்*

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியில் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசத்தாருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.*

*எல். டபிள்யூ. பி. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

## எதிர்ப்பு

**பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தமானப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது பதிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன். ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினுல், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசிலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.**

---

### பிழை திருத்தம்

*1973 ம் வருடம் நொவெம்பர் மாதம் 28 ம் திகதியிடப்பட்ட 87 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1970 ம் வருடம் பெப்ரவரி மாதம் 9 ம் திகதியையுடைய 38 ம் வகுப்பைச் சேர்ந்த வியாபார உரிமை அடையாள இல. 32,368 சம்பந்தமான விடயக் குறிப்பு 7 இன் கீழ், கீழ்க்காணும் அறிவித்தலும் சேர்க்கப்படல் வேண்டும் :—*

*(அ) இவ் வியாபார உரிமை அடையாளப் பதிவு "I" "H" என்ற ஆங்கில அகரவரிசை எழுத்துக்களினதும், வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவத்தில் காணப்படும் விவரண விடயங்களினதும் ஏகபோக பாவிப்பிற்குத் தனியுரிமை வழங்கவில்லை.*

*(ஆ) இதற்கு எதிராக எடுத்துக்காட்டிய வியாபார உரிமை அடையாள இல. 5163 இன் சொந்தக்காரருக்கு இவ்வியாபார உரிமை அடையாளம் பொறித்த வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை அனுப்புவதென்ற ஒப்புதலின் பேரில் இவ்வியாபார உரிமை அடையாளம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.*

*ஜே. அலன் ஐ. விஜயக்கோன்,*
*வியாபாரச்சின்னப் பதிவாளர்.*

*கம்பெனிகள் பதிவாளர் திணைக்களம்,*
*அச்சிலன் சதுக்கம்,*
கொழும்பு 1,
1974 ம் ஆண்டு ஒகஸ்டு மீ 19 ந் திகதி.

3-576—27.03.75 *ந் திகதிய வர்த்தமானி இல.* 157

---

## ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள்

### அறிவித்தல்


*பின்வரும் விபரக்கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.*

இல. 6295—22 *சனவரி*, 1969 (46 *ஆம் பிரிவின்கீழ்* 27, *ஏப்ரில்*, 1962 *ஆம் திகதியின்* 974, 368 *ஆம் இலக்க ஐக்கிய இராச்சிய ஆக்கவுரிமைப் பதிவு*)

*இசுடோபர் இரசாயன நிறுவனம்.*

*" நைதரசன் கொண்டுள்ள எதிர்ச்சுழற்சி காபோதியோலேற்று தாவர கொல்லிகள் ".*

*சுருக்கம் : மணலுக்குத் தாவர நச்சுத்தன்மையைக் கொடுக்கக்கூடிய களைகட்டுப்படுத்தும் ஒரு முறை சம்பந்தப்பட்ட கூட்டினது கண்டுபிடிப்பின் ஒரு வழிமுறையில்*




*இங்கு R, 1 தொடக்கம் 5 காபன் அணுக்கள் கொண்ட ஒரு அற்கைல் குழுவாகும்.*

11 *உரிமை கோரல்களும்* 8 *உதாரணங்களும் உள.*

கொழும்பு,
26 *ஏப்ரில்*, 1973.

*வி. எஸ். நடராசன்,*
*தற்காலிக ஆக்கவுரிமைப் பதிவாளர்.*

3-219/2—27.03.75 *ந் திகதிய வர்த்தமானி இல.* 157

---

### அறிவித்தல்

*பின்வரும் விபரக்கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.*

இல. 6299—27 *சனவரி*, 1969 (46 *ஆம் பிரிவின்கீழ்* 11, *ஒக்டோபர்*, 1965 *ஆம் திகதியின்* 1,051,375 *ஆம் இலக்க ஐக்கிய இராச்சிய ஆக்கவுரிமைப் பதிவு*)

*இம்பீரியல் இரசாயனக் கைத்தொழில்கள் நிறுவனம்.*

*" அலோதேன்களைச் சுத்திகரித்தல் "*

*சுருக்கம் : பின்வருமாறு கூறும் உரிமைகோரல் 1 இலிருந்து கண்டுபிடிப்பின் தன்மை நிச்சயிக்கப்படலாம்.*

1. *அழுக்குகளை ஒன்று அல்லது அதற்கு அதிகமாகக் கொண்டுள்ள அசுத்தமான அலோதேன்களைச் சுத்திகரிக்கும் கலவை வழிமுறையின் செய்முறையில்,*

$$CF_3CX{-}CYCF_3$$

*இங்கு* **X** *ஐதரசனை, புரோமைனை அல்லது குளோறீனைக் குறிக்கின்றது.* **Y** *புரோமைனை அல்லது அலுமீனியம் குளோறைட்டுடன், அலுமீனியம் புரோமைட்டுடன் அல்லது மெல்லுலோக பெண்டா குளோறைட்டுடனுள்ள திரவத்தளத்தில், கூறப்பட்ட அசுத்த அலோதேன்களுடன் நெருக்கமாகத் தொடர்புறும் தன்மை கொண்ட குளோறினைக் குறிக்கும்.*

9 *உரிமை கோரல்களும்* 6 *உதாரணங்களும் உள.*

கொழும்பு,
11 *மார்ச்சு*, 1973.

*ஆர். எஸ். சில்வா,*
*ஆக்கவுரிமைப் பதிவாளர்.*

3-219/1—27.03.75 *ந் திகதிய வர்த்தமானி இல.* 157


### அறிவித்தல்

இல. 6294—23 சனவரி, 1969 (எப். ஆர். ஜேர்மனி நாட்டு 166,68,899·6 ஆம் இலக்க 22 சனவரி, 1968 ஆம் திகதிக்கு முன்னுரிமைகோரும் வழக்கமனு)

பாபனர்க பேகசுடு அக்தி என் சல்காபுடு வோமல்சு பீஸ்டர் லூசியசு அன் புறுனிங்.

"பைரன் காபொஉலிட்சு அமில அனிலேட்டுகளும் நோய்கொல்லிகளாக அவற்றின் உபயோகமும்".

சுருக்கம் : 2–மீதைல்–5, 6–ஈரைதரோபைரன்–3–காபொட்சிலிக்கமில அனிலேட்டுகள் கொண்ட தாவரப்பாதுகாப்பு ஏதுக்களுடன் தொடர்புடைய கண்டுபிடிப்பின் பொதுமுறையில்




R, ஐதரசனை ஒரு மீதைல் குழுவை அல்லது மீதொட்சிக்குழுவைக் குறிக்கும். பிரதிபடுத்தும் பொருட்கள் மீதாவில், ஓதோவில் அல்லது பென்சோன் கருவின் பக்கத்தேயமைந்துள்ள நிலையில் உள்ளன.

17 உரிமை கோரல்களும் 12 உதாரணங்களும் உள.

கொழும்பு,
24 ஏப்ரில், 1973.

வி. எஸ். நடராசன்,
தற்காலிக ஆக்கவுரிமைப் பதிவாளர்.

3–219/3—27.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 157

## வடிவமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள்

### மாதிரி வடிவக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 153)

மாதிரி வடிவக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 153) உட்பிரிவு 32 ன் கீழ் இயற்றப்பட்ட மாதிரி வடிவ 10 ம் விதிகளுக்கிணங்க, போட் சன்லேயிட் செஸ்ரர் பிராந்தியம், இங்கிலாந்து என்ற முகவரியைச் சேர்ந்த ஒரு பிரித்தானியக் கம்பெனியுமான ஜூனிலிவர் லிமிட்டட் என்னும் பெயரில் 12ம் வகுப்பில் உள்ள டி 1405 ம் இலக்க மாதிரி வடிவத்தின் பதிப்புரிமை மேலும் 1975 ம் வருடம் ஜனவரி மாதம் 6 ம் திகதியிலிருந்து மூன்றாந் தவணையாக, ஐந்து வருடங்களுக்கு முறையாக நீடிக்கப்பட்டிருக்கின்றதென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜே. ஏ. ஐ. விஜயக்கோன்,
மாதிரி வடிவப் பதிவாளர்.

கொழும்பு,
1975 ம் வருடம் ஜனவரி மாதம் 31 ம் திகதி.

3–503—27.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 157

### மாதிரி வடிவக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 153)

மாதிரி வடிவக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 153) உட்பிரிவு 32 ன் கீழ் இயற்றப்பட்ட மாதிரி வடிவ 10 ம் விதிகளுக்கிணங்க, போட் சன்லேயிட் செஸ்ரர் பிராந்தியம் இங்கிலாந்து என்ற முகவரியைச் சேர்ந்த ஒரு பிரித்தானியக் கம்பெனியுமான ஜூனிலிவர் லிமிட்டட் என்னும் பெயரில் 12 ம் வகுப்பில் உள்ளபடி 1393 ம் இலக்க மாதிரி வடிவத்தின் பதிப்புரிமை மேலும் 1974 ம் வருடம் ஜூன் மாதம் 23 ம் திகதியிலிருந்து மூன்றாந் தவணையாக, ஐந்து வருடங்களுக்கு முறையாக நீடிக்கப்பட்டிருக்கிறதென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜே. ஏ. ஐ. விஜயக்கோன்,
மாதிரி வடிவப் பதிவாளர்.

கொழும்பு,
1975 ம் வருடம் ஜனவரி மாதம் 31 ம் திகதி.

3–502—27.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 157

### மாதிரி வடிவக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 153)

மாதிரி வடிவக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 153) உட்பிரிவு 32 ன் கீழ் இயற்றப்பட்ட மாதிரி வடிவ 10 ம் விதிகளுக்கிணங்க, போட் சன்லேயிட் விருல், செஷயர், இயங்கிலாந்து என்ற முகவரியைச் சேர்ந்த ஜூனிலிவர் லிமிட்டட் என்னும் பெயரில் 4 ஆம் வகுப்பிலுள்ள டி 1453 ம் இலக்க மாதிரி வடிவத்தின் பதிப்புரிமை மேலும் 1974 ம் வருடம் ஒகஸ்டு மாதம் 22 ம் திகதியிலிருந்து இரண்டாந் தவணையாக, ஐந்து வருடங்களுக்கு முறையாக நீடிக்கப்பட்டிருக்கிறதென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜே. ஏ. ஐ. விஜயக்கோன்,
மாதிரி வடிவப் பதிவாளர்.

கொழும்பு,
1975 ம் வருடம் ஜனவரி மாதம் 31 ம் திகதி.

3–498—27.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 157

### மாதிரி வடிவக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 153)

மாதிரி வடிவக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 153) உட்பிரிவு 32 ன் கீழ் இயற்றப்பட்ட மாதிரி வடிவ 10 ம் விதிகளுக்கிணங்க, போட் சன்லேயிட், விருல், செஷயர், இங்கிலாந்து என்ற முகவரியைச் சேர்ந்த ஒரு பிரித்தானியக் கம்பெனியுமான ஜூனிலிவர் லிமிட்டட் என்னும் பெயரில் 3ம் வகுப்பில் உள்ள டி 1455ம் இலக்க மாதிரி வடிவத்தின் பதிப்புரிமை மேலும் 1974 ம் வருடம் ஒகஸ்டு மாதம் 22 ம் திகதியிலிருந்து இரண்டாந் தவணையாக, ஐந்து வருடங்களுக்கு முறையாக நீடிக்கப்பட்டிருக்கிறதென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜே. ஏ. ஐ. விஜயக்கோன்,
மாதிரி வடிவப் பதிவாளர்,

கொழும்பு,
1975 ம் வருடம் ஜனவரி மாதம் 31 ம் திகதி.

3–484—27.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 157

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1975**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மாச்சு .. | .. வெள்ளி | 7.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 28.2.75 |
| | வெள்ளி | 14.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 7.3.75 |
| | வெள்ளி | 21.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 14.3.75 |
| | வியாழன் | 27.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 21.3.75 |
| ஏப்பிறல் | .. வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் | வியாழன் | 27.3.75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 4.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 11.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 18.4.75 |
| மே .. | .. வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் | வியாழன் | 24.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 2.5.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 9.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 16.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 23.5.75 |
| யூன் .. | .. வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 30.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 6.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 13.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 20.6.75 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் வெ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.